தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ச. கார்த்திகேயன், Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் (பொ) &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-12-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் கற்றலின் போது வருமானம் ஈட்டும் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களுக்காக "கற்றலின் போது வருமானம் ஈட்டும் திட்டம்" கடந்த 1-12-2014 திங்கள் அன்று முனைவர். வெ. இறையன்பு இ.ஆ.ப., இயக்குநர், அண்ணா மேலாண்மை பயிற்சி மையம், சென்னை அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்களுக்கு தேர்வு சான்றிதழ் வழங்கி துவக்க உரையாற்றினார்.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தலைமை தாங்கினார். முனைவர் ஹெ. பிலிப், தனி அலுவலர் (வெளியீடுகள் மற்றும் மக்கள் தொடர்பு) திட்ட குறிப்புரையாற்றினார், முனைவர் எஸ். மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை) வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு முனைவர் என். எஸ். வண்ணமுத்து, நூலகர் வரவேற்புரையாற்றினார். முனைவர் மு. சங்கர், உதவி நூலகர் நன்றியுரையாற்றினார், இந்நிகழ்ச்சியில் தேர்வு செய்யப்பட்ட 76 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

<u>மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

முனைவர் ஹெ. பிலிப்,
தனி அலுவலர் (வெளியீடுகள் மற்றும் மக்கள் தொடர்பு),
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி எண்: 0422-6611202 / 94422 58958

மக்கள் தொடர்பு அலுவலர்